# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 25 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 25


## வேதாகமம் கூறும் உபவாசம்

முழு இருதயத்தோடும், ஒரு நோக்கத்தோடும் பரிசுத்த உபவாசத்தை கடைபிடிக்கும்போது அடைபட்ட கதவுகள் திறக்கும்.நீங்கள் இதுவரை கண்டிராத ஒரு புதிய நம்பிக்கை வெளிப்படும். கர்த்தர் கொடுக்கும் ஆவிக்குரிய ஆயுதங்களை தரித்துக்கொண்ட போர்வீரனாய், ஜெயமெடுக்க வலிமையை தருவார் நம் கர்த்தராகிய தேவன்– ஆர்தூர்வாலிஸ்



**“ உபவாசம் என்பது ஆவிக்கும் மனதுக்கும் புதுஉற்சாகத்தை தந்து, அடைபட்ட வாசல்களை திறந்து தேவனோடு உள்ள ஆவிக்குரிய ஐக்கியத்தை வலுப்படுத்துகிறது”**

### பழைய , புதிய ஏற்பாட்டு ஒழுங்குமுறைகள்

பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் தங்களுடைய ஆவிக்குரிய நன்மைக்கென்று பரிசுத்த உபவாசத்தை கடைபிடித்தார்கள். வேதாகம வரலாற்றிலே நாம் அநேக புருஷர்களும் ஸ்திரீகளும் உபவாசித்து நன்மையை பெற்றுக்கொண்டதை காணலாம்.

இந்த வரிசையிலே நியாயப் பிரமாணத்தைக் கொடுத்த மோசே, தாவீது ராஜா, எலியா தீர்க்கதரிசி, வயதான அன்னாள், பிதாவினுடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்து, அப்போஸ்தலனாகிய பவுல் ஆகியோர் உண்டு. தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் உபவாசித்து ஜெபிக்கும்போது உள்ளான ஆவியும், ஆத்துமாவும் நிறைவான சமாதானம் பெறும்.தேவனோடு உள்ள ஐக்கியம் வலுவடையும். வெறுமனே மாம்சீக உபவாசமாக அது இருப்பின் ஆவிக்குரிய எந்த பயனும் அதில் இல்லை.மேலும் பலருடைய உபவாசமானது வெளிப்புறமான தெய்வபக்திக்கான வேஷமாகவே தொன்றுதொட்டு இருந்து வருகிறது.பக்தியின் அடையாளம் மாத்திரம் தேவனோடு உள்ள ஐக்கியத்தைப் பரிபூரணப்படுத்தாது. ஆவிக்குரிய ஐக்கியத்திலே மனத்தாழ்மையும், பரிசுத்தமும், தேவனோடு உள்ள உறவை வலுப்படுத்துகிறது.ஜான் வெஸ்லி என்பவர் சிலர் மேன்மையான உபவாசத்தையும், சிலர் அலட்சியமான எண்ணங்களையும் உடையவர்களாய் இருக்கிறார்கள். தேவபிள்ளைகளாகிய நாம் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளபடி உபவாசித்து ஜெபிக்கும்போது உண்மையான பரலோக ஈவைப் பெறமுடியும் என்கின்றார்.

### பொருள் வரையறை

உபவாசம் என்பதை சிலர் தன்னுடைய சொந்த மாம்ச இழப்பாகவும், சுயமறுப்பாகவும் எண்ணுகிறார்கள்.ஒரு நடுத்தரமான, சுயகட்டுப்பாட்டை உடைய கிறிஸ்தவர்கள், வேதாகமத்தின் உபவாசம் என்கிற வார்த்தைக்கு உணவைத் தவிர்ப்பது என்று எடுத்துக்கொள்கிறார்கள். ஆகவே சரியான அர்த்தத்தை விளங்கிக் கொண்டு உபவாசிப்பது நல்லது.

### துயரத்தின் அடையாளம்

உபவாசம் என்பது ஆழ்ந்த துக்கம், துயரம் அல்லது துன்பத்தின் அடையாளமாக கருதப்பட்டது. சவுல் ராஜா இறந்த செய்தியை கேட்ட மாத்திரத்திலே தாவீதும், அவனோடிருந்த ஜனங்களும் புலம்பி அழுது (2 சாமு 1 : 11-12) ஏழுநாள் உபவாசித்தார்கள் (1 நாளா 10 : 11-12).


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி உபவாசம் | ஒருநோக்கு செய்தி உபவாசம் | கேள்விக்கென்ன பதில் வேதாகம மொழிபெயர்ப்பில் விடுபட்ட சொற்கள் | உங்களுக்குத் தெரியுமா? ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
|---|---|---|---|---|
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 : 15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23, 24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

**பாவநிவிர்த்திக்கான மோசேயின் உபவாசம்**

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்பிரகாரம் பாவநிவிர்த்திக்கென்று ஒருநாளை நியமித்து உபவாசிப்பார்கள்.அந்த நாள் உங்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபைகூடும் பரிசுத்த நாளுமாயிருப்பதாக.அதிலே யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்(லேவி 23 : 26-32).என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன்; அதுவும் எனக்கு நிந்தையாய் முடிந்தது (சங் 69 : 10).

பாவநிவிர்த்தி செய்யும் அன்றைய நாளில் யாதொரு வேலையும் செய்யாமல், காணிக்கை கொண்டு வந்து தேவசமுகத்தில் உபவாசநாளாய் கடைபிடிக்கப்பட வேண்டும்.புதிய ஏற்பாட்டு நாட்களில் வாழ்ந்த யூதர்களும் கூட அதே ஒழுங்கையே பின்பற்றினார்கள் (அப்போ 27 : 9).

**யூதர்களின் வழக்கமான நான்கு வகையான உபவாசங்கள்**

கர்த்தருடைய வார்த்தைகளைக் தேவஆலயத்தில் உபவாசநாளிலே ஜனங்களுடைய செவிகள் கேட்க வாசிப்பதுமன்றி (எரேமியா 36 : 6), எருசலேமை அழிவிலிருந்து மீட்கும்படியாய் நான்குவிதமான உபவாசங்கள் வருஷந்தோறும் அநுசரிக்கப்படும் (சகரியா 8 : 19).பொதுவான உபவாசநாட்கள் நியமிக்கப்பட்டா லொழிய வேறொருவிதமான தனிப்பட்ட உபவாசமும் நடைபெறும்.பழைய ஏற்பாட்டு உபவாச நியமங்களின் வலிமைதான் இன்றும் நம்முடைய உபவாசத்தின் நோக்கத்தையும், தேவையையும் எடுத்துரைக்கிறது.

**ஐக்கிய உபவாசம்**

வேதாகமத்தில் முதலாவது பொது உபவாசக் கூடுகையானது நியாயாதிபதிகள் 20 : 26 ல் காணலாம். இஸ்ரவேல் புத்திரர் புறப்பட்டு, தேவனுடைய வீட்டிற்குப் போய், அங்கே கர்த்தருடைய சந்நிதியில் அழுது, தரித்திருந்து, அன்று சாயங்காலமட்டும் உபவாசித்து, கர்த்தர் அவர்களுக்கு ஜெயத்தை கட்டளையிட்டார். யுத்தம் வந்தபோது, யோசபாத் பயந்து, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான். அப்படியே யூதா ஜனங்கள் கர்த்தரிடத்திலே சகாயந்தேடக் கூடினார்கள். யூதாவிலுள்ள எல்லா பட்டணங்களிலுமிருந்து அவர்கள் கர்த்தரைத் தேட வந்தார்கள் (2 நாளா 20 : 2-7). அவர்களுடைய மன்றாட்டின் விண்ணப்பத்திற்கு கர்த்தர் செவிகொடுத்தார். நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும், கலங்காமலும் இருங்கள். இந்த யுத்தம் உங்களுடையதல்ல.தேவனுடையது.நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள் என்றார் (2 நாளா 20 : 15-18).

**முறையிடுதலின் வல்லமை**

பாபிலோனிய யூதர்கள் கொல்லப்படும்படியாய் பயமுறுத்தப்படும்போதும், உபவாசத்தின் வாயிலாக விண்ணப்பம் செய்து விடுதலையடைந்ததை காணமுடிகிறது.எஸ்தர் ராஜாத்தி யூதரையெல்லாம் கூடிவரச்செய்து மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள் என்றார் (எஸ்தர் 4 : 16-17). கர்த்தர் அவர்களுடைய உபவாசத்தின் வேண்டுதலை அங்கிகரித்து யூதஜனங்களுக்கு விடுதலையை கொடுத்தார்.எஸ்றாவும் அவனோடு வந்த பணிவிடைக்காரர்களும் வழியிலே சத்துருவின் கைக்கு விலக்கி காக்கும்படியாய் ராஜாவையோ, சேவகரையோ நோக்கிப் பார்க்க வெட்கப்பட்டிருந்தேன். நாங்கள் உபவாசம் பண்ணி எங்கள் தேவனிடத்திலே அதைத் தேடினோம்; எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார் ( எஸ்றா 8 : 21-23). இதிலிருந்து கர்த்தர் உபவாசத்திற்கு அளிக்கும் பலனை காணலாம்.

**தனிப்பட்ட விசுவாசம்**

தாவீதுராஜா தன்னுடைய உபவாசத்தினாலே தன் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினேன் என்று சொல்கிறார்(சங் 35 : 11-13).தாவீது பத்சேபாளிடத்தில் பாவத்திற்குட்பட்டு, பிறந்த ஆண்பிள்ளை வியாதியுற்று மரித்தபின்பு, பிள்ளை இன்னும் உயிரோடிருக்கையில் உபவாசித்து அழுதேன்.இப்போது அது மரித்து விட்டது. நான் உபவாசிக்க வேண்டியதென்ன (2 சாமு 12 : 15-23) என்று சொல்வதை காண முடிகிறது.

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*

*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :—*

**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி,**
**பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

editorial

# ஆசிரியரின் தலையங்கம்

நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கினேன். தானி 9 : 3

அநேக புருஷர்களும், ஸ்திரீகளும் தங்களுடைய முகத்தை தேவனுக்கு நேராக்கி, உபவாசத்தினாலும், ஜெபத்தினாலும் கர்த்தரைத் தேடுவார்களாகில், ஆவியானவரின் அபிஷேகத்தையும் வல்லமையையும் பெறமுடியும்.இந்த இதழில் உபவாசத்தைக்குறித்து தியானிக்க உள்ளோம். உபவாசம் என்பது இன்றைய பல கிறிஸ்தவ ஜனங்களிடையே புறக்கணிக்கப்படுகிறதாயும்,புரிந்துகொள்ளப்படாததாயும் உள்ளது.

உபவாசம் என்பது தன்னைத்தான் வருத்திக்கொள்ளும் காரியம் அல்ல.மாறாக தேவனிடத்தில் நாம் வாஞ்சிக்கிற நம்முடைய காரியங்களை பெற்றுக்கொள்ளும் ஒரு அனுபவம்.கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும் நம்முடைய காரியங்களை வெளிப்படுத்தும் வண்ணமாக மனத்தாழ்மையோடு அவர் சமுகத்தில் அமர்ந்திருந்து உணவைத் தவிர்த்து உபவாசிப்பதே நியமமாகும்.நாம் எல்லோரும் நம் வாழ்வின் பல அலுவல்களுக்கு மத்தியில் இயந்திரமாக இயங்கிக்கொண்டேயிருக்கிறோம்.

உபவாசத்தினால் நம் மனது தெளிவாகும். உலகப்பிரகாரமான வேலைகளைவிட்டு, தேவனோடு செலவழிக்கும் உபவாச நேரத்தால் ஐக்கியம் அதிகமாகும்.அப்பொழுதுதான் தேவன் நம்முடைய தனிப்பட்ட ஜெபங்களில் நம்மோடு பேசுவார்.தேவனோடு உள்ள ஐக்கியமும், வல்லமையும் பெருகும்போதுதான் உண்மையான உபவாசத்தின் வெளிப்பாடாகும்.

எல்லோரும் தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவர்களாகி, உபவாசத்தோடு அவரை சேவிப்பார்களாகில், விசுவாசமும், அர்ப்பணிப்பும் தேவனோடு உள்ள ஐக்கியமும் அதிகமாகும்.

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

*www.thegospeltruth.org*

# 4 - வகையான உபவாசங்கள்

**தெய்வீகமான உபவாசம்**

தேவனால் நியமிக்கப்பட்டது

மோசே 40 நாள் உபவாசித்தார்- யாத் 9 : 9, 18

எலிசா 40 நாள் போஜனம் பண்ணாமல் இருந்தார்-1 ராஜா 19 : 8

**வழக்கமான உபவாசம்**

தண்ணீர் மட்டும் குடித்து போஜனத்தைத் தவிர்ப்பது

யோசபாத்தின் உபவாசம்- 2 நாளா 20 : 3

தாவீது ராஜா போஜனத்தைத் தவிர்த்தார்- 2 சாமு 12 : 21

இயேசுகிறிஸ்து உபவாசமாயிருந்தார் - மத் 4 : 2

**முழுமையான உபவாசம்**

உணவுமின்றி, தண்ணீருமின்றி உபவாசம்

மிருகங்களும், மாடுகளும், ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும் மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்தன - யோனா 3 : 5 -10

அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலும் இருந்தார்கள் - எஸ்தர் 4 :15-16,

எஸ்றா 10 : 6 சவுல் சாப்பிடாமலும் குடியாமலும் இருந்தார் - அப்போ 9 : 9

**பாதி உபவாசம்**

அதாவது குறிப்பிட்ட ஒருவகை உணவை எடுத்து கொண்டு உபவாசமிருப்பது என்பதைக் குறிக்கிறது.ருசிகரமான அப்பத்தையோ, இறைச்சியையோ நான் புசிக்கவில்லை என்று தானியேல் கூறுகிறார் - தானி 10 : 3-5

# வேதபாட வழிகாட்டி

## உண்மையான உபவாசம்



**வேத வாசிப்பு :** பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள்; விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள் ; மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச்செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்– யோவேல் 1 : 14

**செய்திச் சுருக்கம் :** வேதாகமத்திலே பல நீண்ட வருடங்களாக பழைய ஏற்பாட்டு விசுவாசிகளும், ஜனங்களும், புதியஏற்பாட்டு விசுவாசிகளும், ஜனங்களும், புதிய ஏற்பாட்டின் நாட்களிலும் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் கடைபிடிக்கப்பட வேண்டியது உண்மையான உபவாசம். வெளிப்புற போஜனத்தைத் தவிர்த்து ஆத்துமா ஆவியும் தேவனோடு ஐக்கியப்படும். ஆவிக்குரிய வளர்ச்சிக்கும்,அபிஷேகத்திற்கும், வழிநடத்துதலுக்கும் விடுதலைக்குமான வலிமையை தருவதே உபவாசம்.

**வரையறை :** வேதத்தின் பல காரியங்களில் கிறிஸ்தவர்களாகிய நாம் சுயவெறுப்பு உள்ளவர்களாய் இருப்பினும்,உபவாசம் என்பது போஜனத்தை தவிர்த்து தேவசமுகத்தில் நம்மை தாழ்த்தி ஒப்புக்கொடுப்பது என்பதை நாம்  ஏற்றுக்கொள்ள வேண்டும்

**I.மோசேயின் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட உபவாசம்**

A.லேவி 23 : 26-32 பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபைகூடும் பரிசுத்த நாளுமாயிருப்பதாக (லேவி16 : 29-31, எண் 29 : 7)

B.உங்கள் ஆத்துமாவை வருத்தி தாழ்த்தி ஜெபிப்பதே உபவாசம்

C.சங் 69 : 10 என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன்

D.அப்போ 27 : 9 புதிய ஏற்பாட்டு நாட்களிலே யூதர்களும் பரிசுத்த உபவாசநாளை கடைபிடித்தார்கள்

**II.பூமியிலே கிறிஸ்துவின் சுகமாக்குதல் (தீர்க்கதரிசனம் நிறைவேறுதல்)**

A.சகரியா 8 : 19 எருசலேம் தேசம் காக்கப்படும் படியாய் 4 விதமான உபவாசங்கள் கடைபிடிக்கப் பட்டன

**III.பழையஏற்பாட்டு உபவாசங்களின் நோக்கமும் நடைமுறையும்**

A.1 நாளா 10 : 12 அடக்கம் பண்ணினபின்பு, ஏழுநாள் உபவாசம் பண்ணினார்கள் (2 சாமு 1 : 11-12)

B.2 சாமு 12 :16-23 தாவீது தன் பிள்ளை வியாதிப் பட்டிருந்தபோது உபவாசித்து அழுதார்.

C.சங் 35 : 11-13 தாவீது உபவாசத்தால் தன் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினார்.

D.நெகே 9 : 1-3 நியாயப்பிரமாணப்புஸ்தகம் வாசிக்கப்பட்டது.பின்பு ஒரு ஜாமமட்டும் பாவ அறிக்கைபண்ணினார்கள் (எரேமியா 36 : 6)

E.நியா 20 : 25-26 யுத்தத்தின் போது கர்த்தரிடம் அழுது உபவாசித்தார்கள் (1 சாமு 7 : 5-8)

F.2 நாளா 20 : 3 யோசபாத், யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான்.

G.எஸ்றா 8 : 21, 23 வழியிலே சத்துருக்களினின்று பாதுகாக்கப்பட உபவாசமிருந்தார்கள்

H.எஸ்தர் 4 :3, 16 தம் ஜனங்கள் அழிவினின்று காக்கப்படும்படியாக உபவாசித்தார்கள்

I. யாத் 9 : 17-20 இஸ்ரவேல் ஜனங்களின் பாவத்திற் காக மோசே உபவாசித்து அழுதார்

J. தானி 9 : 3-5 இஸ்ரவேல் ஜனங்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட உபவாசித்தார்கள்

K.1 ராஜா 21 : 17-29 ஆகாப் தன் பாவம் மன்னிக்கபடும் படியாய் உபவாசம் பண்ணினார்

L. யோனா 3 : 4-10 நினிவேயின் பாவம் மன்னிக்கப்படும் படியாய் அழிவினின்று காப்பாற்றப்பட உபவாசித்தனர்

**IV.இயேசுகிறிஸ்துவின் ஆலோசனைகளும், உவமைகளும்**

A. மத் 4 : 1-9 இயேசு சோதனையை ஜெயிக்கவும், ஊழியத்திற்காகவும் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தார்

B. மத் 6 : 5, 16-18 நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாலாகாது

C. மத் 9 : 14-17 இயேசுவின் சீஷர்கள் உபவாசிப்பார்கள் என்று அவர் கூறினார்

D. மாற் 9 : 17-29 உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ் விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது (மத் 17 : 14-21)

**V.புதிய ஏற்பாட்டு சபையில் உபவாசம்**

A. லூக் 2 : 37 இயேசுகிறிஸ்துவுக்கு முன்பு, தேவாலயத்திலே அன்னாள் எனும் ஒரு விதவை இரவும் பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணினார்.

B. அப்போ 9 : 9 சவுல் மூன்றுநாள் புசியாமலும் குடியாமலும் இருந்தார்.

C. 2கொரி 6 : 4-10 பவுல் அடிக்கடி உபவாசித்தார்

D. அப்போ 13 : 1-3 அந்தியோகியா சபையில் ஊழியர்களை அனுப்பினார்கள்.

E. அப்போ 14 : 21-23 கலாத்தியா நாட்டு சபைகளிலே மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து உபவாசித்து ஜெபித்தார்கள்

**VI.ஏற்றுக்கொள்ளக்கூடியதும் ஏற்காததுமான உபவாசம்**

A. ஏசா 58 : 3-6 சடங்காச்சாரமாக உபவாசிக்கிறது போல உபவாசியாதிருங்கள்

B. சகரியா 7 : 1-14 நீங்கள் எனக்கென்றுதானா உபவாசம் பண்ணினீர்கள்

C. மத் 6 : 16-18 நீங்கள் உபவாசிக்கும்போது, முகவாடலாய் இராதேயுங்கள்

D. யோவேல் 2 : 12-13 உங்கள் முழு இருதயத்தோடும் உபவாசியுங்கள்

**முடிவு :**

மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களா? மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும்.அப்பொழுது உபவாசிப்பார்கள் - மத் 9 : 15

**மனந்திரும்பி பாவம் மன்னிக்கப்படும்படியான உபவாசம்**
உபவாசம் என்பது பாவம் மன்னிக்கப்படும்படியாய் தேவனிடத்தில் மன்றாடுவதேயாகும்.மோசே இஸ்ரவேல் புத்திரரின் சகல பாவங்களுக்காகவும் இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்து கிடந்தார் (உபா 9 : 18).ஆகாப் உபவாசம் பண்ணி, தாழ்மையாய் நடந்து கொண்டதால் பொல்லாப்பை அவனை விட்டு நீக்கினார் (1 ராஜா 21 : 27-29). நினிவேயின் ஜனங்களுடைய உபவாசத்தோடு கூடிய மன்றாட்டின் விண்ணப்பத்தை கர்த்தர் கேட்டு இரங்கினார் (மிருகங்களும் கூட).தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களை குறித்து மனஸ்தாபப்பட்டு,அதைச் செய்யா திருந்தார் (யோனா 3 : 5-10).

தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி (தானி 9 : 3), தேவனுடைய இரக்கத்தைப் பெறும்படியாய் நின்றார்கள்.காபிரியேல் தூதன், தானியேலுக்குத் தோன்றி மேசியாவின் வருகையைக் குறித்த தரிசனத்தை வெளிப்படுத்தினார்(21-23).

உபவாசம் என்பது பழையஏற்பாட்டு நாட்களின் நியமங்களில் ஒன்றாக இருந்தாலும் கூட, துயரத்திலும், தேவையின் நேரத்திலும் ஜனங்களால் உபவாசம் மேற்கொள்ளப்பட்டது.பாவ மன்னிப்புக்காகவும், வியாதி நீங்கவும், எதிரிகளிடமிருந்து ஜெயம் எடுக்கவும் உபவாசித்து மன்றாடினார்கள்.

மனத்தாழ்மையும், ஆவியிலே நொறுங்குண்டு, உபவாசத்தோடு தேவனிடத்திலே மன்றாடும்போது தேவனோடு உள்ள ஐக்கியம் பெருகும். தெய்வீக உதவியும் அருளப்படும்.

**புதிய ஏற்பாட்டில் உதாரணங்கள்**
ஆவிக்குரிய ஐக்கியத்திற்காக பரிசேயர் உபவாசிக்கும்போது, தேவ ஆவியானவரை மகிமைப்படுத்த அது ஏதுவாகும். கிறிஸ்துவினுடைய வருகைக்கு முன்பதாக, அன்னாள் என்கிற ஒரு விதவையான தீர்க்கதரிசி தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி ஆராதனை செய்துகொண்டிருந்தார் (லூக் 2 : 36-37).

இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்.அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்த பின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று (மத் 4 : 1-3). தேவனிடத்திலிருந்து நியாயப் பிரமாணச்சட்டத்தை பெறுவதற்கு முன்பாக நாற்பதுநாட்கள் மோசே உபவாசித்து ஜெபித்தார்.அதுபோலவே எலியா தீர்க்கதரிசியும் 40 நாட்கள் உபவாசமிருந்தார்.புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராம் இயேசுகிறிஸ்துவும் 40 நாட்கள் உபவாசித்தார்.இவையாவும் வெளிப்படையாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உபவாச நாட்கள். மேலும் அவர் போஜனமில்லாமல் தாகத்தோடும், பசியோடும் பல சூழ்நிலைகளில் ஜெபித்து சுவிசேஷத்தை பிரசங்கித்து வந்தார். அவருடைய உபவாசமே அவரை மிகுந்த பாடுகளையும், நெருக்கங்களையும், சோதனைகளையும் சகிக்கும் தைரியத்தை அவருக்குத் தந்தது.

**கிறிஸ்துவால் உணர்த்தப்பட்ட உபவாசம்**
புதியஏற்பாட்டிலே, உபவாசம் என்பது கட்டளையாக சொல்லப்படவில்லையாயினும், கிறிஸ்துவே அதை உணர்த்தும்படியாக, தாம் அவ்வாறே உபவாசித்தார்.மேலும் அப்போஸ்தலர்கள் உபவாசித்ததையும் நாம் காண முடிகிறது.நீங்கள் உபவாசிக்கும்போது (மத் 6 : 16) நீங்கள் உபவாசித்தால் என்று சொல்லப்படவில்லை.தாம் செய்ததை தமக்கு பின்செல்லுகிறவர்களும் செய்வார்கள் என்று கிறிஸ்துதாமே அறிந்திருந்தார்.ஆகவே உபவாசம் என்பது நம் வாழ்வின் ஒரு அங்கமாகவும், அர்ப்பணிப்புள்ள ஒவ்வொரு தேவனுடைய ஊழியக்காரருடைய கடமையாகும்.

யோவான்ஸ்நானனின் சீஷர்கள் இயேசுவி னிடத்தில் வந்து நாங்களும் பரிசேயரும் அநேகந்தரம் உபவாசிக்கிறோமே ; உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்னவென்று கேட்டார்கள் (மத் 9 : 14).அதற்கு இயேசு மணவாளன் அவர்களைவிட்டு எடுபடும் நாட்கள் வரும்.அப்பொழுது உபவாசிப்பார்கள் (15). இதிலிருந்து சீஷர்கள் மற்ற சீஷர்களைப் போன்று அடிக்கடி உபவாசிக்கவில்லை என தெரிகிறது. பலவிதமான சம்பவங்கள் நாம் வேதத்திலே வாசித்திருக்கிறோம்.சுலபமாக சொல்வோமானால் இயேசு எந்த ஒரு நியாயப் பிரமாணத்திற்கும் அல்லது உபவாசநாளை நியமித்து உபவாசிக்கிறதற்கும் உட்பட்டிருக்க வில்லை.ஆகவேதான் அவருடைய சீஷர்களும், மணவாளனாகிய இயேசு பரத்துக்கு ஏறி, பிதாவினிடத்தில் ஆவியானவராய் சென்றபிறகு சீஷர்கள் உபவாசிக்கத் தொடங்கினார்கள். இயேசுகிறிஸ்து எடுத்துக்கொள்ளப்பட்டபிறகு, தேவனைத் தேடுகிற சபையானது அர்ப்பணிப்போடும் உபவாசத்தோடும் அவரிடத்தில் விண்ணப்பம் செய்து பிழைத்தார்கள்.

**தெய்வீக வல்லமை**
ஒருசமயம், பிசாசு பிடித்திருந்த ஒரு மனுஷனுடைய சரீரத்திலிருந்து அசுத்தஆவியை இயேசுகிறிஸ்துவினுடைய சீஷர்களால் துரத்தகூடாமற்போயிற்று.இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் குறித்து விளக்கி கூறிவிட்டு இந்த ஜாதிப்பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலு மேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார் (மத் 17 : 14-21, மாற் 9 : 17-29).இதிலிருந்து சீஷர்கள் பலவகையான நோய்களையும், பிசாசுகளையும் ஜெபத்தினாலே விடுதலையடைய செய்திருந்தும் அவர்கள் உபவாசித்து ஜெபிக்கவில்லை என



**" நீங்கள் உபவாசிக்கும்போது ...எனப்படுவதால் அர்ப்பணிப்புள்ள தேவபிள்ளைகளின் வாழ்வில் ஓர் அங்கமாக உபவாசம் அனுதினமும் இருக்க வேண்டும் "**



**“ சபையானது அபிஷேக வல்லமையை பெற வாஞ்சிக்குமேயானால் அர்ப்பணிப்போடு கூடிய உபவாசத்தில் நிலைநிற்க வேண்டும்”**

இயேசு உபவாசத்தைக்குறித்து இங்கே அறிவுறுத்தியிருக்கிறார்.இந்த போதனையின் போது இயேசுகிறிஸ்து தாம் மாம்சத்தைவிட்டு எடுபட்டுப் போனபின்பு நடைபெறுவதைக்குறித்து கூறியிருந்தார்.உபவாசத்தினாலும், ஜெபத்தினாலும் தேவனோடு உள்ள ஐக்கியம் பெருகும்போதுதான் இந்த மாதிரியான கடினமான பிசாசுகளை துரத்துகிற அளவுக்கு உங்களிலுள்ள விசுவாசம் உறுதியாகும்.

**சவுல் உபவாசித்தார்**

அவன் மூன்றுநாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும், குடியாமலும் இருந்தான் (அப் 9 : 9). மேலும் ஊழியப்பாதையிலே தன்னை தயார்படுத்திக் கொண்டு, தேவனுடைய அபிஷேகத்தைப் பெற்ற பவுல் உபவாசங்களிலும் எல்லாவற்றையும் உடையவர்களாக எங்களை விளங்கப்பண்ணுகிறோம் (2 கொரி 6 : 4-10). தேவ வல்லமையோடும், அபிஷேகத்தோடும், அர்ப்பணிப்போடும் வாழும்படியாக பவுல் தன்னை ஒப்புவித்தார்.

**வழிநடத்துதலை நாடும் ஆதிதிருச்சபை**

அந்தியோகியா திருச்சபையினர் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள் (அப்போ 13 :2-3).இதுதான் ஆதி திருச்சபையின் ஜெபமும் உபவாசமும்.

அந்தந்த சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி, உபவாசித்து, ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் (அப்போ 14 : 23).இன்றும் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களான தேவஊழியர் ஒவ்வொருவர் மேலும் இந்த பாரம் உள்ளது. பரிசுத்தஆவியின் வழிகாட்டுதலோடு சுவிசேஷ தேவையை பூர்த்திசெய்யும் ஊழியர்களின் சுவிசேஷப் பங்களிப்பு மிக முக்கியமானது. சபை அபிஷேகத்தையும், வல்லமையையும் உடையதாக வேண்டுமெனில், அர்ப்பணிப்போடு பரிசுத்தஆவியானவரின் வழிகாட்டுதலோடு நடத்தப்பட வேண்டும்.

**இன்றைய உபவாசம்**

பழைய ஏற்பாட்டில் மாத்திரமல்ல புதிய ஏற்பாட்டிலும் பலரால் உபவாசம் நமக்கு முன்மாதிரியாக வைக்கப்பட்டுள்ளது.உபவாசம் கிறிஸ்தவ வாழ்வின் ஓர் அங்கம்.சில காரியங்கள் நிறைவேறும்படியாகவும்.தேவனுக்கும் நமக்குமான ஐக்கியம் வலுபெறவும் உபவாசம் அவசியம்.பழையஏற்பாட்டின் நாட்களிலே பொதுவான ஒரு தேவை எழும்பும்போது ஜனங்களெல்லாரும் சேர்ந்து உபவாசித்து ஜெபிப்பார்கள்.நாமும் கூட தேவஊழியர்களாய் இணைந்து உபவாசித்து கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படும்போது சாத்தான் பயந்து நடுங்குவான்.நம் மனமும் ஆவியும் ஒருங்கிணைந்து கர்த்தரை தேடும்போது மெய்யாகவே உள்ளான ஆவி பெலப்படும்.

கர்த்தருடைய கரத்தை நம்மேல் திருப்பவோ அல்லது உண்ணாவிரத போராட்டமோ அல்ல உபவாசம்.நம்முடைய நோக்கமும், பிரியமுள்ள வாஞ்சையுமே.அது தாழ்மையின் அடையாளமும், ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சியுமே.ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று தேவனுடைய வழிகாட்டுதலையும், தேவஞானத்தையும் நாடுவது.

**சுத்தமனசாட்சியின் நோக்கம்**

தேவனுக்கு கீழ்படிந்து உண்மையாய், திறந்த உள்ளத்தோடு அவருக்குச் செய்யும் உபவாசமே ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது.(ஏசாயா 58 : 3-6) தேவன் இஸ்ரவேல் ஜனங்களின் உபவாசங்களில் பிரியப்படாமலிருப்பதைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது.இதையா உபவாச நாளென்றும் கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்? அவர்களுடைய உபவாசத்தின் பெலன் என்ன? அவர்கள் வழக்குக்கும், வாதுக்கும், துஷ்டத்தனத்தை யுடைய கையினால் குத்துகிறதற்கும் உபவாசிக்கிறார்கள்.அவர்களுடைய இருதயம் கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்பட்டிருக்க வில்லை.ஆகவே தேவன் அவர்களுடைய உபவாசத்தை அங்கிகரிப்பதில்லை.

ஆகையால் நம்முடைய உபவாசமும் மாம்சத்திற்கேதுவாயிராமல், ஆவிக்கேற்ற விதமாய் இருக்கக் கடவது.சடங்காச்சாரமாய், கடமைக்காக உபவாசமாயிருப்பது தேவனுக்கு உகந்ததல்ல. சகரியா 7 : 5-7 ல் தேவன், நீங்கள் எனக்கென்றுதானா உபவாசம் பண்ணினீர்கள்? என்று கேட்கிறார். ஏனெனில் பரிசேயர்களின் சுயநீதியைப் போல அவர்கள் கீழ்படியாமையின் பிள்ளைகளாய் வாழ்ந்தார்கள்.நாம் தேவனுக்கு கீழ்படிந்து உபவாசத்தை கைக்கொள்வோம்.

நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு.அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார் (மத் 6 : 16-18).

**சொந்த அனுபவம்**

உபவாசத்தோடும் கூடிய ஜெபம் என்பது தனிப்பட்ட விதத்திலோ அல்லது ஒரு குழுவாகவோ சேர்ந்து ஜெபிக்கலாம். ஆவியானவரின் வழிநடத்துதலோடு, நம் சரீரம் தேவனுடைய ஆலயமாயிருப்பதினால் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் கட்டளைகளின் பிரகாரமாக உபவாசித்து ஜெபிக்க வேண்டும்.

நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்...அவர் இரக்கமும் மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார் (யோவேல் 2 : 12-13).

மணவாளன் இன்று சரீரப்பிரகாரமாக இங்கில்லை.ஆகவே சீஷர்களின் உபவாச காலம் இது.

# கேள்விக்கு என்ன பதில்?

**ஒருவர் எப்போதெல்லாம் உபவாசிக்க வேண்டும்**

புதிய ஏற்பாட்டிலே ஒருவர் எப்போதெல்லாம் உபவாசிக்க வேண்டும் என்று விதிகளெல்லாம் சொல்லப்படவில்லை. பரிசேயர்கள் லூக் 18 : 11 – 12 வசனத்திலே சொல்லும் போது வாரத்திலே இரண்டுதரம் உபவாசிக்கிறேன் என்கிறார்கள். கிறிஸ்துவின் நாட்களிலும் பரிசேயர்கள் நியாயப்பிரமாணச் சட்டத்திற்கு உட்பட்டு உபவாசத்தை கைக்கொண்டார்கள். கலா 5 : 18ல் நல்ல ஆலோசனை தரப்பட்டுள்ளது. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல ஆகவே நாம் எப்போதெல்லாம் உபவாசிக்க வேண்டும் என்று ஆவியானவராலே உணர்த்தப்பட வேண்டும். ஆனால் அது வழக்கமான, சடங்காச்சாரமான ஒன்றாக அனுசரிக்கப்பட கூடாது.

ஆகவே உபவாசம் என்பது கர்த்தருக்கும், மனுஷருக்குமான ஐக்கியத்தினாலே தீர்மானிக்கப்படவேண்டியது. சிலர் அடிக்கடி வெகுநாட்கள் உபவாசித்து தங்கள் சரீரத்தை பெலவீனப்படுத்திக் கொள்கிறார்கள். நம் சரீரம் தேவனுடைய ஆலயமாயிருப்பதினால் அதை ஆரோக்கயமாக வைத்திருப்பதிலும் கவனம் தேவை.

அதேசமயம் உபவாசத்தோடு கர்த்தரைத் தேடுவதன் முக்கியத் துவத்தையும், மதிப்பையும் உணர வேண்டும். அவருடைய சீஷர்கள் உபவாசிப்பார்கள் என்று இயேசு சொன்னார்.

அப்படியானால் நாமும் அவருடைய சீஷர்கள்தானே நாமும் உபவாசிக்கலாமே, நம்முடைய தேவையின் தருணத்தையும், காரியத்தையும் பொறுத்தே உபவாசம் தீர்மானிக்கப்படுகிறது. வாரம் ஒருமுறை அல்லது மாதம் ஒரு முறை உபவாசத்தோடு பலர் ஒன்றாக கூடி பாரத்தோடு தேவ சமூகத்தில் ஜெபிப்பது கிறிஸ்தவர்களின் நல்ல ஒரு ஒழுங்காகும்.

**எந்த மாதிரியான உபவாசத்தின் தன்மை இருக்க வேண்டும் எவ்வளவு நாட்கள் உபவாசம் இருக்க வேண்டும்?**

உபவாசம் என்பது கர்த்தர் கொடுத்த வரங்களில் ஒன்று. ஆவியானவரின், வழிநடத்துதலின்படியே செய்யப்பட வேண்டும்.தேவநாமம் மகிமைப் படும்படியாக நாம் எந்தவிதமான உபவாசத்தை மேற்கொண்டாலும் சரி. எவ்வளவு நாட்கள் என்பதும் உங்களுடைய ஜெபம் சார்ந்தது.மோசே, எலியா, இயேசுகிறிஸ்து இவர்கள் யாவருமே 40 நாட்கள் உபவாசமிருந்தார்கள்.பொதுவாக நீங்கள் பார்க்கும்போது இது அதிகமான நாட்களாக தோன்றலாம். ஆனால் தேவனுடைய வழிநடத்துதலோடு உபவாசிக்கும்போது அது ஆரோக்கியமான ஒன்றாகவே இருக்கும்.

ராஜா, தானியேல் தீர்க்கதரிசிக்காக இரவு முழுவதும் போஜனம் பண்ணாமல் இருந்தார் (தானி 6 : 18).எஸ்தர் தன்னுடைய யூத ஜனங்களுக்காக மூன்றுநாள் உபவாசமிருந்தார் (எஸ்தர் 4 : 16). சாதாரணமாக யூதர்களின் உபவாசமானது காலைமுதல் சாயங்கால மட்டுமே இருந்தது வழக்கம்(நியா 20 : 26, 2 சாமு 3 : 35). சிலர் சூரியன் அஸ்தமிப்பது தொடங்கி 24 மணி நேரம் சென்று மீண்டும் அஸ்தமனம் நிகழும் வரைக்கும் உபவாசித்திருக்கிறார்கள். தேவனோடு சிறப்பாக நேரத்தை செயல்படுத்தும்படியாய் ஒருவேளை போஜனத்தை யாகிலும் தவிர்த்து ஜெபித்தவர்களுமுண்டு.

# வேதாகம மொழிபெயர்ப்பில் விடுபட்ட சொற்கள்

மத்தேயு 17 : 21, மாற்கு 9 : 29 மற்றும் 1 கொரி 7 : 5 இவற்றிலெல்லாம் சொல்லப்பட்டுள்ள உபவாசத்தின் வல்லமையை நாம் இன்னும் நீக்கப்பட்ட வேதாகம பகுதிகளிலிருந்து அதிகமாக தெரிந்து கொள்ளலாம்.

மத்தேயு 17 : 21, மாற்கு 9 : 29 சம்பவங்களில் சீஷர்களால் ஒரு மனுஷனுக்குள் இருந்த அசுத்த ஆவியை துரத்தக்கூடாமற் போயிற்று. அதைக் கேட்ட இயேசு இவ்வகை பிசாசுகள் ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி வெறெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார். ஆதாம் கிளார்க் மற்றும் வேதாகம ஆராய்ச்சியாளர்கள் பலரது கூற்றுப்படி, மத் 17 : 21 முழு உலகத்திற்குமான ஒரு ஆழமான, ஆணித்தரமான வரலாற்று பழமைமிக்க ஒரு சம்பவம், வேதாகமத்தின் பல மொழிபெயர்ப்புகளில் பல வார்த்தைகள் , விடுபட்டு எழுதிய சம்பவம் ஆகும்.

உபவாசத்தின் வல்லமையைக் குறித்து மகத்துவத்தை வெளிப்படுத்தும் நிகழ்வு . அதன் ஆதாரம் அந்த வசனத்தினுள் அடங்கியுள்ளது. வாட்டிகன் எம்.எஸ் மொழிபெயர்ப்பில் நிகழ்ந்த அனைத்து மொழிபெயர்ப்பு வேதாகமங்களிலும் உபவாசம் என்கிற வார்த்தை மத்தேயு சுவிசேஷத்தில் எழுதப்பட்டுள்ளது. ஸ்வாகிலியில் உபவாசம் என்கிற வார்த்தையை மாற்கு சுவிசேஷத்தில் காணமுடியாது.

1 கொரி 7 : 5 ல் புருஷனும் மனைவியும் உபவாசத்திற்கென்று நேரத்தை ஒதுக்கும்படியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதிலும் பல பழைய மொழிபெயர்ப்புகளில் சரியாக குறிப்பிடப்படவில்லை. ஜாமிசன், பாசட், பிரவுன் பைபிள் உபவாசம் என்பது குறிப்பாக ஸ்பானிஷ், ஸ்வாகிலி மொழிகளில் உபவாசம் என்பது விடப்பட்டும் ஆங்கில மற்றும் ஜெர்மன் மொழிபெயர்ப்புகளில் சேர்க்கப்பட்டும் உள்ளது.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section

# TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY



உங்களுக்குத் தெரியுமா?

பொதுவாக கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாழ்விலே லெந்துநாட்கள் என்பது ஜெபம், உபவாசம், தியாகம் மற்றும் நற்செயல்களுக்கான காலமாக கருதப்பட்டும்,இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் நாளை கொண்டாடும் விதமாகவும் அனுசரிக்கப்படுகிறது. நாற்பதுநாட்கள் லெந்துகாலம் என அனுசரிப்பது கோட்பாடு அல்ல.லெந்து என்பது கிறிஸ்துவின் பாடுகளை நினைவுகூரும் நாள் என்பதும் பொதுவான கருத்து.ஆயினும் பழம்பெரும் தேவாலயங்களிலும் கூட இந்த லெந்து நாட்களின் நினைவுகூருதல் அநுசரிக்கப்படுவதில்லை.ஆதி திருச்சபைகளில் உபவாசமானது இயேசுகிறிஸ்து கல்லறையில் வைக்கப்பட்டிருந்த அந்த நாற்பது மணி நேரம் இருந்தது.வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே இது விவாதத்திற்குரிய ஒன்றாகவே இருந்தும் வருகிறது. சிலர் இதனை ஒருநாள் அல்லது இரண்டுநாட்கள் உபவாசம் என்றெல்லாம் போதிக்கிறார்கள்.கி.பி 325 ஆம் கிறிஸ்தவ ஆண்டுகளின் தொடக்கத்தில் நிசேயா கவுன்சில் பரிந்துரைக்குப் பின்புதான் நாற்பதுநாள் என்று மாறியது.

உபவாசம் என்பது வெறுமனே போஜனத்தை தவிர்ப்பது மட்டுமல்ல.பல விடுவிக்கப்படமுடியாத காரியங்களுக்காக ஜெபிப்பதே. தேவபிள்ளைகள் குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காக மனுஷரால் நியமிக்கப்பட்ட சமயம் சார்ந்த கோட்பாடுகளுக்கு அடிமைப்பட்டிருக்க வேண்டியதில்லை.மாறாக தேவனுடைய பரிசுத்தவான்கள் அர்ப்பணிப்புள்ள வாழ்க்கை வாழும்போதுதான் உண்மையான பரிசுத்த ஜீவியம் உள்ளது.



ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## தேவனிடத்தில் கெஞ்சி மன்றாடுவது

மோசே, தன் தேவனாகிய கர்த்தரிடத்தில் கெஞ்சிப் பிரார்த்தித்தான் – யாத் 32 :11

மோசே, கர்த்தருடைய கற்பலகைகளை கையில் ஏந்திக்கொண்டு, சீனாய் மலையிலிருந்து இறங்கி வருகையில், ஜனங்கள் தேவனாகிய கர்த்தரைவிட்டு விலகி பொன்னால் செய்யப்பட்ட கன்றுகுட்டியை வணங்குவதைக் கண்டார்.தேவனுடைய உக்கிர கோபம் பற்றியெரிந்தது. நான் இந்த வணங்கா கழுத்துள்ள ஜனங்களை அழித்துப் போடும்படியாக என்னை விட்டுவிடு என்று தேவன் மோசேயோடே சொன்னதினிமித்தம், மோசே எனும் தேவனுடைய தாசன் தேவனை நோக்கி அவர்தம் ஜனங்களுக்காக கெஞ்சிப் பிரார்த்தித்தார்.அதினிமித்தம் தேவன் செய்ய நினைத்த தீங்கை செய்யாதபடிக்கு பரிதாபங்கொண்டார்.



ஏனெனில் மோசே தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக தன்னை தாழ்த்தி, மன்றாடி, கெஞ்சி தேவசந்நிதியில் முறையிட்டு, விண்ணப்பம் செய்து பிரார்த்தித்தார்.ஆகவே தேவன் இஸ்ரவேல் ஜனங்கள்மேல் மனஸ்தாபப்பட்டார். அன்று மோசே மாத்திரம் தேவனிடத்தில் முறையிட்டு, கெஞ்சி மன்றாடவில்லையானால் அன்றைய தினமே தேவன் இஸ்ரவேலர் யாவரையும் நிர்மூலமாக்கிப் போட்டு, மோசேயைக் கொண்டு ஒரு புதிய சந்ததியினரை எழும்ப பண்ணியிருக்கக்கூடும்.

கர்த்தருடைய வழி பெரிதும் பயங்கரமுமானது. அதை அறியத்தக்கவன் யார்? .அவர் எவன்மேல் இரக்கங்கொள்ள சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருப்பார்.தேவன் ஒவ்வொருமுறையும் யாராவது ஒருவருடைய கூக்குரலின் மன்றட்டின் நிமித்தம் தம் ஜனத்தின்மேல் இரக்கம் செய்வார்.கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களின் ஜெபத்தையும், உபவாசத்தையும், அழுகையோடும், புலம்பலோடும் அவர் சந்நிதியில் மன்றாடும் விண்ணப்பங்களுக்கு மகா பலத்த கிரியை செய்திருக்கிறார்.அநீதிக்கு எதிராக நியாயத்தீர்ப்பு செய்யும்போது கூட, மோசேயின்நிமித்தம் அந்த ஜனங்களுக்கு இரக்கம் பாராட்டினார்.இதுதான் மற்றவர்களுக்காய் மன்றாடி ஜெபிப்பதின் வல்லமை. எதிரியான பிசாசானவன் ஜெபித்து எதைக் காண்கிறாய் என்று வஞ்சனையாய் நம்மை ஏமாற்ற எண்ணுவான்.

ஆனால் கடந்த மற்றும் நிகழ்கால சம்பவங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்வது யாதெனில் தேவனாகிய கர்த்தர் பரலோகத்திலிருந்து நம் ஜெபத்தை கேட்டுக்கொண்டேயிருக்கிறார். ஆகவேதான் நாம் சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும்.எப்படி தேவன் தம் தாசனாகிய மோசேயின் ஜெபத்தைக் கேட்டு தன் இருதயத்தை திருப்பி ஜனங்களுக்காக இரக்கம் பாராட்டினாரோ, அதேபோலதான் மற்றவர்களுக்காய் நாம் ஜெபிக்கும்போது மிகப்பெரும் வல்லமையான காரியங்களை தேவன் செய்வது மாத்திரமல்ல, இழந்துபோன ஆத்துமாவுக்கு மீட்பும், மாற்றங்களைக் காணும் வாழ்வையும் தருவார்.

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD Worship Place: Preshitha Bhavan, Seelakkampatti Road, Kedimedu, Kolarpatti - 642 107

தேவசபை ஆராதனை நடைபெறும் இடம் : பிரசீதா பவன், சீலக்காம்பட்டி ரோடு, கெடிமேடு, கோலார்பட்டி - 642 107

SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி

எந்த ஆலயத்திற்கும் செல்லாமல் இருப்பவர்கள் எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with us on Real Truth    Phone (போன்) : 9597562641

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316